**பிப்ரவரி – 20**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் குன்னூரில் புதிய வைரஸ் தடுப்பு மருந்து உற்பத்தி அலகு ஒன்றை அமைப்பதற்காக இந்திய பாஸ்டர் நிறுவனத்திற்கு (Pasteur Institute of India - PII) நிலத்தை ஒதுக்குவதற்கான பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- துணைக் கடற்படைத் தலைவரான எஸ்.என். கர்மேடு விசாகப்பட்டினத்தின் கிழக்குக் கடற்படைப் படைப் பிரிவின் தலைமைத் தளபதியாகப் பொறுப்பேற்றார்.
- அமைப்புசாரா துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான “பிரதான் மந்திரி ஷரம் யோகி மந்தன் யோஜனா” என்ற திட்டத்தை 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று மத்திய நிதி அமைச்சகம் தொடங்கி வைத்தது.
- கிரேட்டர் சிம்லா பகுதியில் வாழும் மக்களுக்கு நம்பத் தகுந்த மற்றும் தூய்மையான குடிநீர் கிடைக்கப் பெறுவதற்கு உதவுவதற்காக ரூ.40 மில்லியன் மதிப்பிலான கடன் ஒப்பந்தம் ஒன்றில் இந்திய அரசாங்கம், இமாச்சலப் பிரதேச அரசு மற்றும் உலக வங்கி ஆகிய மூன்றும் கையெழுத்திட்டுள்ளன.
- உலக காது கேட்புத் திறன் தினத்தை (மார்ச் 3) முன்னிட்டு, திறன் பேசிகள் உள்ளிட்ட இசைக் கருவிகளின் தயாரிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான ஒரு புதிய சர்வதேசத் தரத்தினை உலக சுகாதார நிறுவனம் மற்றும் சர்வதேச தொழிற் சங்கம் (International Trade Union) ஆகியவை இணைந்து வெளியிட்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## சுவச்தா சிறப்புமிகு விருதுகள் 2019

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 முதல் 15 ஆம் தேதி வரை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தினால் சஹரி சம்ரித் உத்சவ் என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



- இந்நிகழ்ச்சியின்போது பகுதி நிலையிலான கட்டமைப்புகள், நகர வாழ்வாதாரக் கட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளூர் அமைப்புகள் ஆகியவற்றிற்கு மொத்தம் 40 விருதுகள் வழங்கப்பட்டன.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் ராய்கார் மாநகராட்சி நிர்வாகம் 2019 ஆம் ஆண்டிற்கான சுவச்தா சிறப்புமிகு விருதுகளை வென்றுள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் அம்பிகாபூர் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் தமிழ்நாட்டின் கும்பகோணம் மாநகராட்சி நிர்வாகம் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது விருதுகளைப் பெற்றுள்ளன.

## VAYU SHAKTHI நடவடிக்கை - 2019

- இந்திய விமானப் படையானது இந்தியாவின் 140 போர் விமானங்கள் மற்றும் தாக்குதல் நடத்தும் வானூர்திகள் ஆகியவை பங்கு பெற்ற மிகப்பெரிய நடவடிக்கையான எதிரிகளை சுட்டு வீழ்த்தும் செயல் விளக்கத்தை பாகிஸ்தான் எல்லைக்கருகில் இராஜஸ்தானின் பொக்ரானில் நடத்தியது.
- இந்த "VAYU SHAKTHI" நடவடிக்கையில் இந்திய விமானப் படையானது குறைவான எடையுள்ள போர் விமானமான தேஜாஸ், மேம்படுத்தப்பட்ட குறைவான எடையுள்ள வானூர்தி, தரையிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஆகாஷ் மற்றும் வானிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையான அஸ்த்ரா போன்ற உள்நாட்டு வடிவமைப்புகளின் சுட்டு வீழ்த்தும் திறனை வெளிப்படுத்தியது.

## வட கர்நாடக வேளாண் வானிலையியல் (Agromet) முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல், சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் ஆகிய துறைகளுக்கான மத்திய அமைச்சர் ஹர்ஷ் வர்தன் கர்நாடகாவின் தார்வாடில் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில் உள்ள வட கர்நாடக வேளாண் வானிலையில் முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தைத் (North Karnataka Agromet Forecasting and Research Centre - NKAFC) தொடங்கி வைத்தார்.
- இது இந்தியாவின் முதலாவது வேளாண் வானிலையியல் முன்னறிவிப்பு மையமாகும்.
- இந்த மையத்தின் முதன்மையான நோக்கம் வானிலை குறித்த துல்லியமான தகவல்களைத் தருவதன் மூலம் பயிர்களைப் பாதுகாத்தல் மற்றும் நல்ல விளைச்சலை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காக விவசாயிகளுக்கு உதவுவதாகும்.
- மேலும் இந்த மையமானது வெவ்வேறு வானிலைகளில் பயிர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்தான அறிவை விவசாயிகளுக்கு ஏற்படுத்தும். எனவே விவசாயிகள் தங்களது பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டமிடுவர்.

## சர்வதேச அணைப் பாதுகாப்புக் கருத்தரங்கு 2019

- இரு நாட்கள் நடைபெறும் 5-வது சர்வதேச அணைப் பாதுகாப்புக் கருத்தரங்கு – 2019 ஆனது ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெற்றது.
- இந்தக் கருத்தரங்கானது உலக வங்கியினால் ஆதரிக்கப்படும் அணைப் புனரமைப்பு

மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் (Dam Rehabilitation and Improvement Project - DRIP) ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின் நோக்கம் 7 மாநிலங்களில் உள்ள 223 அணைகளைப் புனரமைப்பதாகும்.

❖ ரூபாய் 600 கோடி மதிப்பில் ஹீராகுட் அணைக்காக கூடுதல் வழிகால்களை கட்டமைப்பது உள்பட ஒடிசாவில் உள்ள 26 மிகப்பெரிய அணைகள் புனரமைப்பிற்கான DRIP திட்டத்தில் உள்ளடங்கும்.




## முத்தலாக் மீதான இரண்டாவது அவசரச் சட்டம்

❖ மத்திய அமைச்சரவையானது முத்தலாக் மீதான இரண்டாவது அவசரச் சட்டத்திற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.

❖ முஸ்லீம் ஆண்களால் உடனடியாக முத்தலாக் மேற்கொள்ளுதலை தண்டனைக்குரிய குற்றமாக இச்சட்டம் ஆக்கியுள்ளது.

❖ தலாக்-இ-பிதாத் நடைமுறையை செல்லுபடியாகாமல் செய்வதற்கான மசோதாவானது மாநிலங்களவையில் நிலுவையில் இருக்கிறது. இது ஜூன் 03 அன்று மக்களவை கலைகின்ற பொழுது இந்த மசோதாவும் காலாவதியாகிவிடும்.


❖ இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் இந்த அவசரச் சட்டத்தில் கையெழுத்திட்டால், ஓராண்டுக்குள்ளாக மூன்றாவது முறையாக முத்தலாக் அவசரச் சட்டம் நடைமுறைக்கு வரும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

## ஸ்பியரெஸ் திட்டம் (SPHEREx MISSION)

❖ பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்து புரிந்து கொள்வதற்கு வேண்டி ஒட்டுமொத்த வான் பரப்பையும் ஆய்வு செய்வதற்காக மிகவும் புகழ்பெற்ற திட்டமான ஸ்பியரெஸ் (SPHEREx) என்ற திட்டத்தை நாசா (NASA) தொடங்குகிறது.

❖ SPHEREx என்பது பிரபஞ்சத்தின் வரலாற்றை அறிவதற்கான நிறமாலை ஒளிமானி, மறு அயனியாக்கத்தின் காலகட்டம் மற்றும் பனிக்கட்டிகளை ஆய்வு செய்தல் என்பதாகும்.



- இந்தத் திட்டம் 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்படவிருக்கிறது.

## PMAY (U) – கைபேசிச் செயலி

- பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAY-U) என்ற திட்டத்திற்கான கைபேசிச் செயலியை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் (தனிப் பொறுப்பு) ஹர்தீப் சிங் புரி புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.
- இந்த செயலியானது தங்களது குடும்பத்தினருடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீட்டின் உயர் தெளிவு கொண்ட புகைப்படத்தை எடுத்துப் பதிவிட பயனாளர்களை அனுமதிக்கிறது.
- மேலும் இது கட்டி முடிக்கப்பட்டுள்ள வீட்டுடன் தங்களது சுயப் படத்தை எடுத்துப் பதிவிடவும் PMAY-U திட்டத்தின் கீழ் தங்களது சொந்த வீட்டின் கதைகளை 30-60 வினாடிகள் அளவிலான காணொளித் துணுக்குகள் மூலம் பகிர்ந்து கொள்ளவும் பயனாளிகளுக்கு அனுமதியளிக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் நதி புத்துயிர்ப்புத் திட்டம் - ஒப்பந்தம்

- இந்திய – ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இடையிலான நதிப் பங்குரிமைக் கட்டமைப்பின் (India-EU water partnership - IEWP) கீழ் இந்தியாவின் நதிப் புத்துயிர்ப்புத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக இந்தியாவுடன் 3 ஐரோப்பிய நாடுகள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது நதிப் புத்துயிர்ப்புத் திட்டத்திற்காக ஐரோப்பிய ஒன்றிய புத்தாக்கத் தொழில்நுட்பங்களின் செயல்படுத்துதலை ஏற்படுத்தும்.
- புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் IEWP மற்றும் ஜெர்மனி, ஹங்கேரி, நெதர்லாந்து, சர்வதேச அமைப்புகள் மற்றும் கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றிற்குகிடையே 4-வது இந்திய ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இடையிலான நதிகள் மன்றத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டன.
- 4-வது இந்திய ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இடையிலான நதிகள் மன்றம் என்பது புது தில்லியில் TERI அமைப்பாலும் IEWP அமைப்பாலும் இணைந்து நடத்தப்

பட்ட உலகின் நீடித்த வளர்ச்சி மேம்பாட்டிற்கான மாநாட்டின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதலாவது மாவட்ட அளவில் குளிர்விக்கும் அமைப்பு

- இந்தியாவின் முதலாவது மாவட்டக் குளிர்விக்கும் அமைப்பானது ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரான அமராவதியில் அமையவிருக்கிறது.
- ஐக்கிய அரபு அமீரகத்தை தலைமையாகக் கொண்டு செயல்படும் சர்வதேச குளிர்விக்கும் அமைப்பை வழங்குநரான "தப்ரீட்" ஆனது மாவட்ட குளிர்விக்கும் அமைப்பைக் கட்டமைத்து, நிர்வகித்து, செயல்படுத்தி மற்றும் மாற்றுவதற்காக ஆந்திரப் பிரதேச அரசுடன் ஒரு 30 ஆண்டுகால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- மாவட்ட குளிர்விக்கும் அமைப்புகள் மைய ஆலைகளில் குளிர்விக்கப்பட்ட நீர், நீராவி மற்றும் சூடான நீர் ஆகியவற்றை உற்பத்தி செய்து, அதன் மூலம் வெளிப்படும் ஆற்றலை குழாய்களின் மூலம் குளிரூட்டுவதற்காக கட்டிடங்களுக்கு அனுப்புகின்றன.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் சட்டமன்றம், உயர்நீதிமன்றம், தலைமைச் செயலகம் மற்றும் இதர அரசு அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவற்றின் குளிர்விக்கும் தேவைகளை இந்த அமைப்பு பூர்த்தி செய்யும்.
- இந்த மாவட்டக் குளிர்விக்கும் அமைப்பானது நகரக் கட்டிடங்களைக் குளிர்விப்பதற்காக 50 சதவிகித அளவிற்கு முதன்மை ஆற்றல் நுகர்வை மட்டுமே பயன்படுத்தும்.
- மேலும் இது கார்பன் உமிழ்வைக் குறைக்கும்.

## மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதியத் திட்டங்கள்

- பீகார் அரசின் தற்போதைய ஓய்வூதியத் திட்டமானது வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பிரிவினருக்கு மட்டுமே பொருந்தும்.
- இந்த சூழ்நிலையில், அனைத்து மூத்த குடிமக்களையும் உள்ளடக்குவதற்காக பின்வரும் புதிய ஓய்வூதியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- முக்கிய மந்திரி விரிதாஜன் ஓய்வூதியத் திட்டம் – MVPY (Mukhyamantri Vridhajan Pension Yojna)
    - 60 வயதைக் கடந்த அனைவருக்குமான முக்கிய மந்திரி விரிதாஜன் ஓய்வூதியத் திட்டம் – MVPY என்ற மாநிலம் தழுவிய புதிய ஓய்வூதியத் திட்டத்தை பீகார் முதல்வர் அறிவித்துள்ளார்.
    - இத்திட்டத்தின் மூலம், அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற மூத்த குடிமக்களைத் தவிர சாதி, மதம் மற்றும் சமூகம் என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் மாத ஓய்வூதியமாக 400 ரூபாயைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.
- பீகார் பட்ராகர் சம்மன் யோஜனா (BPSY - Bihar Patrakar Samman Yojana)
    - மேலும் பீகார் மாநில முதல்வர் 60 வயதிற்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கும் 6000 ரூபாயை மாத ஓய்வூதியமாக

அறிவித்துள்ளார்.

- ஊடகத் துறையில் தொடர்ந்து பணியாற்றும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் எந்தவொரு ஓய்வூதியத்தையும் பெறாத பத்திரிக்கையாளர்கள் அனைவரும் பீகார் பட்ராகர் சம்மன் யோஜனா என்ற திட்டத்திற்குத் தகுதியுடையவர்களாவர்.

❖ இந்த இரு திட்டங்களும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படவிருக்கின்றன.

- - - - - - - - - - - - - - -